57
3-JAN 1956

தமிழ்நாட்டில் பூமிதான யக்ஞ இயக்கம் Regd. No. M 6207.

கிராமோதயம்

8 பக்கங்கள்

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 | திருப்பூர் - செப்டம்பர் 15 * 1954 * விலை 1 அணா | இதழ் 22

வேற்றுமைகளை மறப்போம்!

நாம் தினந்தோறும் மாலை பிரார்த்தனையின் நிமித்தம் ஒன்றுசேருகிறோம். குழந்தைகளும் பெரியவர்களும், புருஷர்களும், ஸ்திரீகளும் ஆகிய எல்லோரும் சேர்ந்து கடவுளைத் தியானிக்கிறோம். அதுசமயம் நமதிடையேயுள்ள வேற்றுமைகளை மறந்து இருக்கிறோம். மனிதனால் ஏற்படுத்தப்பட்ட செயற்கையான வேறுபாடுகளை பிரார்த்தனை சமயத்தில் நாம் மறந்துவிடுகிறோம். இது கடவுளால் நமக்களிக்கப்பட்ட வரப்பிரசாதமாகும். பிரார்த்தனை சமயத்தில் எல்லா வேற்றுமைகளையும் மறந்து சந்தோஷமான மனத்துடன் இருக்கிறோம். இவ்விதமான சந்தோஷத்தையும், அமைதியையும், நாம் தூக்கத்திலேதான் அடைகிறோம். இந்த மனோ நிலையை விழித்திருக்கும்பொழுது நாம் பெறுவதற்கான வழியை பிரார்த்தனை நமக்குக் காட்டுகிறது. ஏழைகள் குடிசையில் உண்பதற்கு போதிய உணவு இருப்பதில்லை. ஆனால் இவர்களுடைய அன்பு கலந்த வாழ்க்கையின் காரணமாக குடிசையில் அமைதி நிலவுகிறது சாந்தி, திருப்தி இவையிரண்டும் விலைக்கு வாங்குகிற வஸ்துக்கள் அல்ல. அதற்காக நாம் மக்களாகிய கடவுளுடன் ஒன்றிக்கலந்துவிட வேண்டும். ஒவ்வொருவரும் அவரவர்கள் வீடுகளில் சாந்தியும், திருப்தியும் சிறிதளவேனும் பெறுகிறார்கள். அதேவிதமான சந்தோஷத்தையும், திருப்தியையும் சமூகத்திலும் பெறுவதற்கான முயற்சியை நாம் செய்வோமாக.

— வினோபா.

மனிதன் அதிகாரத்தால் ஆளப்படுகிறதில்லை!

"People are governed not by power but by purpose.... not by fear but by hope.... Democratic education is not merely to make people literate or give them useful information or train them in technical skill but it is something more. It is large-mindedness, magnanimity, respect for human beings and the art of living together. It is bringing grace into the heart of man."

— Dr. S. RADHAKRISHNAN

மக்கள் அதிகாரத்தால் ஆளப்படுவதில்லை. லட்சியத்திற்காக ஆளப்படுகின்றனர்... பயத்தால் ஆளமுடியாது. நம்பிக்கையால்தான் ஆளமுடியும். ஜனநாயகக் கல்வி முறை மக்களை எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக்குவது மட்டிலுமல்ல! அவர்களுக்கு பயனுள்ள தகவல்களும், நுண்ணறிவும், புகட்டுவது மட்டும் கல்வியாகாது! பரந்த உள்ளத்தோடும், பெருந்தன்மையோடும், ஒற்றுமையோடும் வாழச் செய்வதுதான் கல்வி!... மனிதனது உள்ளத்தில் இரக்கத்தை உண்டு பண்ணுவதே — கல்வி

— டாக்டர் எஸ் ராதாகிருஷ்ணன்

[ஒஸ்மானியா சர்வகலாசாலையின் 1953-ம் ஆண்டு பட்டமளிப்பு விழா பிரசங்கத்திலிருந்து.]

"நமஸ்காரம்"!

சென்ற ஆகஸ்டு முதல்தேதியிட்டு வெளியிடப்பட்ட கிராமோதயத்தில் நேயர்களின் ஆதரவைக் கோரியிருந்தோம்.

ஆகஸ்டு 15 தேதி சுதந்திரதின திருவிழா முதல் அக்டோபர் இரண்டாம் தேதி, காந்தியடிகளின் பிறந்த தினம் வரைக்கும் இவ்வாண்டு தமிழ்நாடெங்கும், பூமிதான யக்ஞம், சம்பத்து தான யக்ஞம், ஜீவன்தான் முதலிய அமைதிப் புரட்சி இயக்கங்களை பரவச்செய்வதென்று தமிழ்நாட்டு சர்க்கா சங்க ஊழியர்கள் தங்களுக்குள் கலந்து முடிவு செய்தார்கள்! அம்முடிவு செய்யும்பொழுது சென்ற 30 ஆண்டுகளாக கதர் உற்பத்தி, விற்பனை வேலைகளிலேயே ஈடுபட்டு வந்த சர்க்கா சங்க ஊழியர்களுக்கு தங்கள் வியாபார சிறப்பைத் தவிர மேற்கூறிய ஆத்மீக இயக்கங்களைப் பரப்பும் ஆற்றலும் அறிவும் இருக்கிறதா என்று பலர் சந்தேகம் கொண்டனர்! பல ஊழியர்கள் தாங்கள் கிராமங்களில் சென்று பிரசாரம் செய்வதினால் பூமிதான யக்ஞத்திற்கும், துணை இயக்கங்களுக்கும் பொது மக்களிடமிருந்து ஆதரவு கிடைக்குமா என்ற சந்தேகமும் எழுந்தது!

ஆனால் சென்ற இரண்டு வார காலமாக எமது தொண்டர்கள் பிரசாரம் செய்யும்பொருட்டு கிராமங்களுக்குச் சென்றபொழுது அவர்களுக்கு அங்கு பொதுமக்கள் அளித்த வரவேற்பும், ஆதரவும் கண்டு நாம் பெருமிதம் கொள்ளுகிறோம்.

வழக்கத்தைக் காட்டிலும் சென்ற இதழ் 'கிராமோதயம்' 1000 பிரதிகள் அதிகமாகவே அச்சிடப்பட்டிருந்தும், வாடிக்கையாக ரொக்கம் கொடுத்து வாங்கிவரும் பல நேயர்களுக்கும், சந்தா செலுத்தி உரிய காலத்தில் காரியாலயத்திற்கு அறிவித்த நேயர்களுக்கும்கூட பத்திரிகை அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. பத்திரிகை கிடைக்காத நேயர்கள் மன்னிப்பார்களாக. இத்தகைய ஆதரவைப் பெருவாரியாக அளித்த அன்பர்களுக்கு எமது அளவிறந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

— அ. பாலகிருஷ்ணன்.

தலைமைக் காரியாலய தமிழ்நாட்டுப் பிரதிநிதி.

உமரிமாநகரில் கிராமோதய கதர்சங்க ஆண்டுவிழா

ஏரல் கிளை வஸ்திராலயத்துடன் இணைக்கப்பட்டிருக்கும், உமரிமாநகர் "கிராமோதய கதர் சங்க"த்தின் ஆண்டுவிழா சென்ற 3-9-'54 தேதி வெள்ளியன்று மாலை 7 மணிக்கு ஸ்தல சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீ பி. ஏ. தங்கசாமி நாடார் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. ஷ விழாவில் ஆறுமுகநேரி பஞ்சாயத்து போர்டு தலைவர் ஸ்ரீ எம். எஸ். செல்வராஜ், வக்கீல் திரு குமரகுருபரன், பி. ஏ. பி. எல். அவர்கள், ஸ்ரீமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் முதலியவர்கள் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார்கள்.

— அ. அய்யம்பெருமான்

3-JAN 1956

தமிழ் நாடு பூமிதான இயக்கம் ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் அவர்கள் சுற்றுப் பிரயாணத் திட்டம்

அகில இந்திய சர்வோதய சமாஜத் தலைவர் ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் அவர்கள், தமிழ் நாட்டில் இம்மாதம் 16-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை பூமிதான சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். இந்தத் தடவை அவர் கால் நடையாக யாத்திரை செய்யவில்லை. ரயில், கார் போன்ற வாகன வசதிகளைக்கொண்டு கீழ்க்கண்ட பிரகாரம் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். பூமிதான இயக்க ஊழியர்களும், ஆதரவாளர்களும், தேவ் ஜி அவர்களுடைய சுற்றுப் பிரயாணத்தை வெற்றிகரமாக நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். பெரிய, சிறிய எல்லா நிலச்சுவான்தார்களையும் அணுகி நிலதானம் வாங்க வேண்டும். அதிக நில தானம் வாங்க வேண்டுமென்பது ஒரு புறமிருக்க அதிக பேரிடமிருந்தும் தானம் வாங்க வேண்டும். பீஹார்மாகாணத்தில்சிறிய பெரிய பட்டாதார்கள் 35 லட்சம் பேர் இருக்கிறார்கள். வினோபாஜி 35 லட்சம் பேர்களிடமிருந்தும் 35 லட்ச தான பத்திரம் பீஹார் மாகாணத்தில் தனக்குக் கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறார். இவ்வித முயற்சி இப்பொழுது எல்லா மாகாணங்களிலும் நடக்கிறது.

இயக்கத்துடைய தத்துவங்கள் பரவும் பொருட்டு எல்லோரையும் அணுகி நிலதானம் பெற வேண்டும். ஒரு கிராமத்தில் எத்தனை பட்டாதார்கள் இருக்கிறார்களோ அத்தனை பூமிதானப் பத்திரம் கிடைக்கும்படி வேலை செய்ய வேண்டும். இதன் மூலமாகத்தான் கருத்துப் புரட்சி பரவ முடியும். பூமிதான யக்ஞம் மக்களுடைய இயக்கமாக உருவாகும். ஆகையால் எல்லோரும் தேவ்ஜி அவர்களின் சுற்றுப்பிரயாணத்தை வெற்றிகரமாக நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். தேவ்ஜி அவர்களின் சுற்றுப் பிரயாணம் கீழ்க்கண்டவாறு:—

16, 17-ம் தேதிகளில் செங்கல்பட்டு ஜில்லா

18-ம் தேதி தென்னாற்காடு ஜில்லா

19, 20-ம் தேதிகளில் தஞ்சாவூர் ஜில்லா

21-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை மதுரை, ராமநாதபுரம் ஜில்லா

24, 25-ம் தேதிகளில் திருநெல்வேலி ஜில்லா

தேவ்ஜி அவர்களின் சுற்றுப் பிரயாணம் முடியும்பொழுது 24, 25-ம் தேதிகளில் இரண்டு தினங்களிலும் திருநெல்வேலி ஜில்லாவில் தமிழ் நாடு சர்வோதய சம்மேளனம் நடைபெறுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. அதன் விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஊழியரகம்,
காந்தி கிராமம்,
10—9—54.

ச. ஜெகந்நாதன்,
கன்வீனர்,
தமிழ் நாடு பூமிதான கமிட்டி.

தீபாவளிக்கு ஒரு கோடி ரூபாய்க்கு கதர் விற்பனை கதர் போர்டு திட்டம்:-

இந்தியன் ஸ்டான்டர்டு இன்ஸ்டிட்யூஷன் கட்டிடத்தின் அஸ்திவாரக்கல் நாட்டு விழாவில் பேசுகையில் பிரதம மந்திரி ஸ்ரீ நேரு அவர்கள் தேசத்தில் 'சுதேசி' மனப்பான்மையை மீண்டும் எழச்செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். மேற்படி வேண்டுகோள் சமயோசிதமும், பொருத்தமும் ஆகும். ஆனால் 'எது சுதேசி' என்பது யாவருக்கும் தெளிவாக இருப்பது அவசியம்.

'சுதேசி'யை குறிப்பிடுகையில் காந்தியடிகள் கூறுகிறார். "சுதேசிதான் தேசத்தின் சிறந்த பாதுகாப்பரண். அதை ஒரு தேசிய கடமையாக் கடைப்பிடித்தால்தான் அதை நாம் சாதித்ததாகக் கூறமுடியும். அது ஒரு உபாயமாயினும்சரி, லட்சியமானாலும்சரி, சுதேசியம் இல்லாத சுயராஜ்யம் உயிரற்ற பிணமாகும்! சுயராஜ்யத்தின் ஆன்மா சுதேசியானால் சுதேசியின் ஆன்மா கதர் ஆகும்! சுதேசி துணி என்பது கதர் ஒன்று மட்டுமே!"

இந்த வருடம் காந்திஜயந்தி காலத்தில் 1 கோடி ரூபாய்க்கு கதர் கூப்பன்கள் வெளியிட்டு விற்பனை செய்வதென்று அகில இந்திய கதர் கிராமக் கைத்தொழில் போர்டு நிர்ணயித்துள்ளது. கதர் உற்பத்திக்கு தேசத்தில் கதரின்பால் பொது ஜன அபிப்பிராயத்தைத் திரட்டுவதற்கான திட்டங்களில் இதுவும் ஒன்று.

கூப்பன்கள் பலவகையானவை. ரூ. 2/- ரூ. 5/- ரூ. 10/- ரூ. 25/- ரூ. 50/- ரூ. 100/-. கதர் கூப்பன்கள் விற்பனை மூலம் கிடைக்கும் பணம் கதர் உற்பத்தியை அதிகரிக்க ஈடுபடுத்தப்படும். கதர் கூப்பன்கள் ஒரு அளவுகோல் போன்றது. அது எவ்வளவு விற்பனை ஆகிறதோ அவ்வளவு பொதுஜன ஆதரவும், கதரின்பால் பொதுமக்களுக்கிருக்கும் விருப்பத்தையும் குறிப்பிடும். கோடிக்கணக்கான மக்களின் துயரத்தை நீக்குவதில் பொதுமக்களுக்குள்ள சிரத்தையையும் கூப்பன் விற்பனை குறிப்பிடும். ஏனெனில் கதர் வாங்குவதற்காக செலவிடப்படும் ஒவ்வொரு ரூபாயும், இன்று பஞ்சமும், பட்டினியும் பிடித்துள்ள ஒரு குடும்பத்திற்கு ஒரு வேளை கஞ்சியளிக்க உதவுகிறது என்பதை மறக்கலாகாது!

ஆகையால் கதர் கூப்பன்கள் வாங்குவது எவ்வளவு தர்மகாரியமாக கருதப்படுகின்றனவோ, அவ்வளவு தேசிய அபிவிருத்தி வேலையாகவும் மதிப்பிடலாம்.

இந்த கதர் கூப்பன்கள் சீக்கிரமே பொதுமக்களிடையே விற்பனை செய்ய ஏற்பாடாகியுள்ளது. அவைகளை பொதுமக்களனைவரும் வாங்கி உதவி புரிவார்கள் என்று நம்புகிறோம்.

பம்பாய்,
27—8—'54.

வி. கே. நாராயணசாமி.

தமிழ் நாட்டில் பூமிதான யாத்திரைகள்

சிப்பிப்பாரை

15—8—'54 ஞாயிற்றுக்கிழமை இவ்வூர் உயர்நிலைப் பள்ளி சார்பிலும் பஞ்சாயத்து போர்டு சார்பிலும் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் வஸ்திராலய தொண்டர்கள் கலந்துகொண்டு பூமிதானப் பிரசாரம் செய்யப்பட்டது.

22—8—'54 ஞாயிற்றுக்கிழமை கொடைப்பாரை கிராமத்திற்குச் சென்று பூமிதானப் பிரசாரம் செய்யப்பட்டது.

நெல்லை விபாக் 30—8—'54ம் தேதி தலைமைக்காரியாலய துணை நிர்வாகி ஸ்ரீ ஜி. ராமானுஜம் அவர்கள் தலைமையில் சிப்பிப்பாரை வஸ்திராலய நிர்வாகி ஸ்ரீ எம். அண்ணாமலை அவர்களும் வஸ்திராலய தொண்டர்கள் நான்கு பேர்களும் சிப்பிப்பாரை பஞ்சாயத்து போர்டு வைஸ்பிரஸிடெண்ட் ஸ்ரீ எஸ். அப்பாசாமி அவர்கள், கிராமோதய சங்கக் காரியதரிசி ஸ்ரீ எஸ். அழகர்சாமி, கிராமோதய சங்க மெம்பர் ஸ்ரீ பா. ராமகிருஷ்ணன் அவர்கள் மற்றும் கதர் அன்பர்கள் 15 பேர் கொண்ட கோஷ்டியுடன் சிப்பிப்பாரை, முக்கூட்டுமலை கிராமங்களுக்கு பூமிதானப் பிரசாரத்திற்கு சென்று கீழ்கண்டவர்களிடம் பூமிதானம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

3 - JAN 1956 MADRAS

ஸ்ரீ எஸ். அழகர்சாமி சிப்பிப்பாறை புஞ்சை 86 செ.
" பா. ராமகிருஷ்ணன் " " 34 "
ஸ்ரீமதி கணபதியம்மாள் கஸ்தூரி
ரெங்கபுரம் " 9 "
மொத்தம்... 129 "

— ம. அண்ணாமலை

குண்டடம்.

கத்தாங்கண்ணி கிராமோதய கதர் சங்கத்திற்குச் சென்று 29-8-1954ல் கிளை தொண்டர்களும், மற்றும் கதர் நெசவாளர்கள் சிலரும் சேர்ந்து பூமிதானக் கூட்டம் நடத்தப்பட்டது.

ஷை கூட்டத்திற்கு கிராமோதய கதர் சங்கத்தின் சார்பில் காரியதரிசி ஸ்ரீ ஆர். பெரியசாமிக் கவுண்டர் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். தலைவர் முன்னுரைக்குப் பின்னர் கிளைத் தொண்டர்களால் பூமிதான யக்ஞ வரலாற்றைப் பற்றியும், இதைத் தொடர்ந்து பூமிதான "சிறு நாடகத் தொடரில்" சம்பாஷணை மூலம் விளக்கமாகக் கூறப்பட்டது.

இத்தினத்தில் பூமிதானத்தை சந்தோஷமாக ஒப்புக்கொண்டு மனமுவந்து பூமிதானம் அளித்தவர்கள் விபரம் கீழ்கண்டபடி:

பெயர்	த. பெயர்	ஊர்	பு. ஏக்கர்
முத்துப்பழனிக் கவுண்டர்,	S/o முத்துக்கவுண்டர்,	கத்தாங்கண்ணி	2
கெட்டிமுத்துக் கவுண்டர்,	S/o ராமசாமிக்கவுண்டர்	ஷை	2
ராமசாமிக் கவுண்டர்	S/o அமராவதிக் கவுண்டர்	ஷை	1
நல்லதம்பிக் கவுண்டர்	S/o அமராவதிக் கவுண்டர்	ஷை	1
ராமசாமி கவுண்டர்	S/o உத்தமசாமி கவுண்டர்	ஷை	1
முத்துச்சாமிக் கவுண்டர்	S/o உத்தமசாமிக் கவுண்டர்	ஷை	1
		மொத்தம் புஞ்சை ஏக்கர்	8

பென்னுசாமி ஆசாரி S/o வெங்கிடாசல ஆசாரி,
கத்தாங்கண்ணி. கலப்பை 1

மேலும் பல மிராசுதார்கள் தங்கள் நிலத்தை தருவதாக வாக்களித்துள்ளார்கள். அவர்கள் விபரம் அடுத்த இதழில் வெளிவரும்.

சுந்தரபாண்டியம்

சென்ற 29—8—'54 ஞாயிற்றுக்கிழமை ரெங்கநாயக்கன்பட்டி, கிராமோதய கதர் சங்க காரியதரிசி ஸ்ரீ ஸ்ரீனிவாசன் தலைமையில் ஸ்ரீ இ. எம். துரைசாமி, ஸ்ரீ எஸ். குருசாமி, ஸ்ரீ ராமலிங்கம் முதலியவர்கள், கோஷ்டியாக சென்று குன்னூர் கிராமத்தில் பூதான யக்ஞம், சர்வோதய லட்சியம், கிராமோதய வேலைத் திட்டம் முதலியவைகளைப்பற்றி பிரசாரம் செய்துவந்தனர்.

இதே கோஷ்டியினர் 22—8—'54 ஞாயிறன்று ரெங்கநாயக்கன்பட்டியில் பிரசாரம் செய்தனர்.

— இ. எம். துரைசாமி

சாத்தூர்

29—8—'54 ஞாயிறு காலை 8-30 மணிக்கு சாத்தூர் கிளையிலிருந்து ஒத்தையால் கிராமத்திற்கு சென்று பூமிதான யக்ஞ பிரசாரம் செய்து வந்தனர். "கிராமங்களில் வசித்துவரும் கோடிக்கணக்கான மக்களுக்கு சரியான வாழ்க்கைவசதிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் மில் பொருட்களின் உபயோகத்தை நீக்கி, குடிசைத் தொழில்களை வளர்த்து அவைகள் மூலம் உற்பத்தியாகும் பொருட்களையே உபயோகிப்பதன் அவசியத்தைப்பற்றி" எடுத்துரைக்கப்பட்டது.

இந்த கிராமத்தில் ஹரிஜனங்கள் பனைநார் பெட்டியை கைத்தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். அத்தொழிலுக்கு போதிய ஆதாரம், நியாயமான கூலியும் கிடைப்பதில்லை என்றும் அதற்கு குடிசைத்தொழில் போர்டார் உதவியளிக்க வேண்டும் என்றும் கோரினார்கள். இந்த கைத்தொழிலுக்கு ஊக்கமளித்தால் சிறப்புற்று விளங்கும் என்றும் தெரியவருகிறது.

— மு. ரா. கிருஷ்ணசாமி

திண்டிவனம்

சென்ற 5—9—'54 ஞாயிற்றுக்கிழமை பாஞ்சாலம் கிராமத்திற்கு சென்று பூமிதான யக்ஞ பிரசாரம் செய்யப்பட்டது.

— வி. திருவேங்கடய்யா

நம்பியூர்

16—8—'54 காலை புது அய்யாம்பாளையத்திலும் 22—8—'54 காலை பழைய அய்யாம்பாளையத்திலும் 29—8—'54 காலை கோட்டுப்புல்லாம்பாளையத்திலும் 6—9—'54 மாலை குப்பிபாளையத்திலும் சென்று பூமிதான யக்ஞப் பிரசாரம் செய்யப்பட்டது. "கிராமோதயம்" சந்தா 23 சேர்க்கப்பட்டது.

— எஸ். ஆறுமுகம்

புளியம்பட்டி

15—8—'54 காலை புதுப்பாளையம் கிராமோதய கதர் சங்கத்தின் சார்பில் கொடியேற்று விழாவும், நூற்பு போட்டியும் நடத்தப்பட்டு, சிறந்த நூற்பு நூற்ற மூவருக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

மாலை 8 மணிக்கு கோபிதாலூகா காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ எஸ். கே. சாமிகவுண்டர் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பல்லடம் தாலூக்கா பூமிதான யக்ஞ கன்வீனர் ஸ்ரீ டி. பி. இராமசாமி அவர்களும், புளியம்பட்டி சர்வ சேவா சங்க காதி வஸ்திராலய நிர்வாகி ஸ்ரீ ஏ. ஜி. முத்துவேலப்ப கவுண்டர், காங்கிரஸ் ஊழியர்கள் ஸ்ரீ கே. பி. சென்னியப்பன், ஸ்ரீ கே. ஏ. பழனியப்பன், ஸ்ரீ கே. வி. காளியப்ப கவுண்டர் ஆகியோர், கிராமோதய கதர் சங்கங்களின் நோக்கம், பூமிதான யக்ஞம் முதலிய விஷயங்களைப்பற்றி சொற்பொழிவாற்றினார்கள். இவ்வட்டாரத்தில் மேலும் தீவிரமாக பூமிதான யாத்திரை செய்வதற்கு ஏற்பாடு செய்வதாகவும் இவ்வட்டார மிராசுதார் ஸ்ரீ கே. வி. காளியப்ப கவுண்டர் அவர்கள் வாக்களித்துள்ளார்.

23—8—'54 தேதியன்று கிட்டாம்பாளையத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடத்தி ஒரு சர்க்கா சங்க கிளை ஆரம்பிக்கப்பட்டது.

31—8—'54 தேதி அதே கிராமத்தில் பூமிதான யக்ஞ பிரசாரம் செய்யப்பட்டது.

— ஏ. ஜி. முத்துவேலப்பன்

படியூர்

சென்ற 5—9—'54 தேதி மாலை படியூர் காதி வஸ்திராலய தொண்டர்களும், ஸ்தல கதரன்பர்களும், சேர்ந்த ஒரு கோஷ்டி சிவகிரி, தொட்டிபாளையம், ரெட்டியபாளையம் முதலிய கிராமங்களுக்குச் சென்று பூமிதான யக்ஞப் பிரசாரம் செய்து வந்தனர். ஷை கூட்டத்தில் படியூர் கதர் வஸ்திராலய நிர்வாகி அவர்கள் பேசியதாவது:

"காற்று, தண்ணீர், வெளிச்சம் முதலியன எவ்வாறு உலகுக்கு பொதுவாக இருக்கின்றதோ, அதே மாதிரி நிலமும் ஊருக்குப் பொதுவாக வேண்டும். பெரும் நிலச்சுவான்தார்கள் நிலமில்லாத ஏழைகளுக்கு தமது நிலத்தில் ஒரு பகுதியை பகிர்ந்து கொடுத்து ஏழை எளியோன், ஆண்டை, அடிமை என்ற பேத பாவனையைப் போக்கினால்தான் நம் பொதுவாழ்வில் நிம்மதி பெறலாம்."

104

(தொடர்ச்சி 101ம் பக்கம் பார்க்க)

"உலகிலுள்ள நிலமனைத்தும் உலகநாதன் உடைமையே
ஊரிலுள்ள விளைநிலங்கள் ஊர்ப்பொதுவாம் கடமையே"

கிராமோதயம்

செப்டம்பர் 15 1954

தமிழ்நாட்டில் சர்க்கா சங்க ஊழியர்களால் பூமிதான இயக்கம் தீவிரம்.

வாழ்க்கை அர்ப்பணம்

பூமிதான இயக்கத்துடன் ஜீவன் தான் அல்லது வாழ்க்கை அர்ப்பண இயக்கமும் தோன்றியிருக்கிறதல்லவா? ஜீவன்தான் அல்லது வாழ்க்கை அர்ப்பண இயக்கத்தை ஆரம்பித்தவர் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள். அதிலுள்ள அற்புதம் என்னவென்றால் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களிடம் விநோபாஜி அவர்கள் தமது வாழ்க்கையை அர்ப்பணித்து "பூமிதான யக்ஞ இயக்கத்தின் மூலம் கிராமக் குடிசைக் கைத்தொழிலை ஆதாரமாகக்கொண்ட அகிம்சா புரட்சிக்கு என்னுடைய வாழ்க்கையை அர்ப்பணம் செய்கிறேன்" என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டார். அன்றிலிருந்து இதுவரை தேசமுழுவதும் அப்புரட்சியின் மூலம் சர்வோதய சமூக அமைப்பின்கீழ் ஏறக்குறைய ஆயிரம்பேர் தங்களை அர்ப்பணித்து ஜீவன்தான் செய்திருக்கிறார்கள்.

பூரண அமைதிக்குப் புரட்சி

விநோபாஜி அவர்கள் எடுத்துக்கொண்ட 'பூமிதான இயக்கத்தின் மூலம் கிராமக் கைத்தொழிலை ஆதாரமாகவுடைய அகிம்சாபுரட்சிக்கு வாழ்க்கையர்ப்பணம் என்ற உறுதிமொழி ரத்னச் சுருக்கமாக காந்திஜியினுடைய தத்துவங்கள் அத்தனைக்கும் மூலமந்திரமாகவும், ஜீவநாடியாகவும் அமைந்திருக்கிறது. விவசாயமும் விவசாயப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட இதர (இவையிரண்டும் முக்கிய தொழில்களாகும்) ஏழை மக்களின் வாழ்வு இவைகளின் அடைப்படையிலே தான் அமைந்திருக்கிறது. உணவு, உடை எல்லோருக்கும் பூரணமாகக் கிடைக்க வேண்டும். இவைகளில் யாருக்கும் குறைவு இருக்கக்கூடாது. அந்தவிதமான சமுதாய அமைப்பிற்கு இரு முனைகளிலும் புரட்சிகரமான மாறுதல் வேண்டும். கதர்த் தொழில் இதர கிராமக்கைதொழில்களுக்கு நடுநாயகமாகவும், கேந்திரமாவும், கிரகங்களில் சூரியனைப் போன்றும் விளங்குகின்றன. தொழில்களில் புரட்சிச் சின்னம் கதர் இயக்கம்; விவசாயத் துறையில் புரட்சிச் சின்னம் பூமிதான இயக்கம். இவ்விருமுனைப் புரட்சி நிறைவேறுவதின் மூலம் தான் சமுதாயத்தில் பூரண அமைதி நிலவும். விநோபாஜியின் உறுதிமொழியில் இந்த உண்மை பொதிந்திருக்கிறது. இரண்டும் ஏக காலத்தில் நிறைவேற வேண்டும். ஒன்றுக்குப்பின் மற்றொன்றாய் நிறைவேறுவதென்பது முடியாது. கதர் இயக்கமும் பூமிதான இயக்கமும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதவை.

கதரியக்கமும்-தொண்டர்களும்

கதர் இயக்கம் ஏறக்குறைய 30 வருஷ சரித்திரத்தைக் கொண்டது. அந்நிய அரசாங்கத்தின் ஆதிக்கத்தின் சுரண்டலிலிருந்து விடுபட்டு தோன்றித் தழைக்க ஆரம்பித்தது. பல நெருக்கடியான சந்தர்ப்பங்களிலிருந்து தப்பித்து வளர்ந்தது. இறுதியில் அதன் வளர்ச்சி அற்புதமானது. கலையும் சாஸ்திரமும், கணிதமும் நிறைந்த ஒப்புயர்வற்ற தத்துவ இயக்கமாகத் திகழுகிறது. தேச முழுவதும் ஆயிரக் கணக்கான ஊழியர்கள் மெய்மறந்து கதர் இயக்கத்தில் தங்களை அர்ப்பணித்திருக்கின்றார்கள். அதிலும் தேசத்திற்கு எடுத்துக்காட்டாக தமிழ்நாட்டில் கதர் இயக்கம் சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

1952 மதுரை பூமிதான சம்மேளனம்

1952ம் வருஷத்தில் மதுரை ஜில்லாவிலுள்ள கதர் ஊழியர்கள் சர்வோதய சம்மேளனத்தைக் கூட்டினார்கள். தமிழ்நாட்டிலுள்ள இதர நிர்மாண ஊழியர்களும் அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்தார்கள். அந்த மகாநாட்டில்தான் தமிழ்நாட்டில் பூமிதான இயக்கத்தை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டு திட்டங்கள் வகுக்கப்பட்டன. கடந்த இரண்டு வருஷங்களில் தமிழ்நாட்டில் பூமிதான இயக்க சாதனை போற்றற்குரியது. பூமிதான இயக்கத்தில் சர்க்கா சங்க ஊழியர்களின் பங்கு மகத்தானது.

புதிய பிரதிநிதியும் புது வேகமும்

கடந்த ஒருமாதமாக தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கு சர்க்கா சங்க ஊழியர்கள் தீவிரமாக இயக்கத்தில் ஈடுபடுவதின் காரணமாக பூமிதான இயக்கம் தீவிரமடைந்து வருகிறது. இப்பொழுது புதிதாக நியமிக்கப்பட்டிருக்கின்ற அகில பாரத சர்வ சேவா சங்கத்தின் சர்க்கா சங்க தமிழ்நாட்டுப் பிரதிநிதியாகிய ஸ்ரீ அ. பாலகிருஷ்ண பிள்ளை அவர்கள்தான் இந்த உத்வேகத்திற்குக் காரணம். அமைதியான தோற்றம் உடையவர். பேச்சுக் குறைவு. ஆனால் திறமையாகக் காரியத்தைச் சாதிப்பவர். இரு கண்களும் ஒரே நோக்குடன் கவனிப்பது போன்று கதர் இயக்கத்தையும், பூமிதான இயக்கத்தையும் ஒன்றெனநினைத்து இருபகுதிகளிலும் உழைத்து வருகிறார். அவர் ஈடுபட்டதின் காரணமாக தென்னாற்காடு ஜில்லாவில் பூமிதான இயக்கம் உருவாகிவிட்டது. முதலில் அவர் தானேவழிகாட்டினார். அருமையான நஞ்சை ஏக்கர் ஒன்றும், பத்து ஏக்கர் புஞ்சையும் தானமாகக் கொடுத்தார். தென்னாற்காடு ஜில்லாவில் பல அன்பர்கள் நஞ்சை நிலம் தானமாகக் கொடுப்பதற்கு ஸ்ரீ பாலகிருஷ்ண பிள்ளை அவர்கள்தான் காரண புருஷராவார். இந்த இணைப்பு நீடித்து வேலை செய்தால் லக்ஷியம் விரைவில் பூர்த்தியாகும். ஸ்ரீ பாலகிருஷ்ண பிள்ளை அவர்களின் நன் முயற்சியை தமிழ்நாடு பூமிதானக் கமிட்டி மிகவும் பாராட்டுகிறது. சர்க்கா சங்க ஊழியர்கள் பூமிதான இயக்கத்தில் ஈடுபடுவது பன்மடங்கு பலத்தைக் கொடுக்கிறது.

காந்திகிராமம்,
8—9—'54.

ச. ஜெகந்நாதன்,
கன்வீனர்.
தமிழ்நாடு பூமிதான யக்ஞ கமிட்டி

ஆகஸ்ட் மாதத்தில் மதுரை-ராமநாதபுரம் ஜில்லாவில் பூமிதான வேலை

ஜூலையில் நடந்த அருப்புக்கோட்டைத் தாலூகா யாத்திரைக்குப் பின்பு ஆகஸ்ட் 10உ முதல் 19உ வரை அருப்புக்கோட்டைத் தாலூக்காவில் ஸ்ரீ ஏ. வி. திருப்பதி ரெட்டியார் அவர்களுடனும் சுற்றினோம். ஜில்லா போர்டு தேர்தல் காரணமாக நல்ல பலன் கிட்டவில்லை. ஆனால் முந்திய யாத்திரையில் வாக்களிக்கப்பட்ட பூமிதானங்களுக்கு பத்திரங்கள் பலரிடம் எழுதி வாங்கப் பெற்றன. இது தவிர மற்ற நாட்களில் பூமி

தான அன்பர்கள் பலரைத் தனியாக சந்தித்துப் பிந்திய பூமிதான யாத்திரைத் திட்டங்களுக்கு ஆதரவு தேடுவதிலும் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. முன்னால் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் சுற்றுப்பிரயாணத்தின் போது சிவகாசி, விருதுநகர் வட்டங்களில் வாக்களிக்கப்பட்ட பூமிதானங்களுக்குப் பத்திரங்கள் புதிதாக எழுதி வாங்கப்பட்டன. ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூக்காவில் சிறு சிறு விவசாயிகள் அதிகம். எல்லோரும் தங்கள் தங்கள் நிலங்களை மிகவும் பேணி நல்ல விவசாயம் செய்கிறார்கள். தங்கள் உடைமைகளை விட்டுக் கொடுக்க மனம் தயாராக வேண்டும். இதற்கான சூழ்நிலை ஏற்படுத்துவது நமது கடமை. மேலும் அந்தத் தாலூக்காவில் சர்வோதய பூமிதான லட்சியங்களுக்காகப் பாடுபடும் ஊழியர் பலரை தயார்படுத்தவும் நோக்கங்கொண்டு "சர்வோதய சங்கம்" என்ற ஒரு ஸ்தாபனம் 26–8–'54ல் நிறுவப்பட்டிருக்கிறது. அதன் சார்பில் பூமிதான சர்வோதய பிரசாரத்திற்கு கிராமங்களில் வந்து கலந்துகொள்ளக்கூடிய, நூற்கத் தெரிந்த 20 பேர்கள் அங்கத்தினர்களாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஸ்தாபனத்திற்கு உறுதுணையாக நிற்கும் பலரை ஆதரவாளராக சேர்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதன் ஆதரவில் பல சர்வோதய பூமிதான பிரசுரங்கள் வெளியிடவும் பொதுக்கூட்டங்களும் யாத்திரைகள் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பூமிதான வேலை ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகாவில் இனி உற்சாகமாக நடக்க நல்ல அறிகுறிகள் உண்டு. சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூக்காக்களில் கதர் வஸ்திராலயத் தொண்டர்கள் கடந்த இரு வாரங்களில் அவரவர் பகுதியிலுள்ள கிராமங்களில் பூமிதான பிரசாரக் கூட்டங்கள் நடத்தினார்கள். சாத்தூர் கதர் வஸ்திராலயத்தார் 3 ஏக்கர் பூமிதானமும் பெற்றிருக்கிறார்கள். அறப்புக்கோட்டைத் தாலூக்காவில் இம்மாதத்தில் 40 ஏக்கர் நிலம் கிடைத்திருக்கிறது. ஆக மொத்தம் 43 ஏக்கர் பூமி தானமாகக் கிடைத்துள்ளது.

— டி. டி. திருமலை

'அமெரிக்காவில் ஆதாரக்கல்வி'

பாட்டும் கதையும் பள்ளிக்கு அடிகோலிற்று

ஒரு ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவில் ஜோர்ஜியா ராஜ்யத்தின் 'ரோம்' கிராமத்தில் திருமதி பேரி பாடிக்கொண்டிருந்தாள், ஜன்னல்கள் வழியாக ஒளிந்திருந்து எட்டி எட்டிப் பார்த்து பாட்டை கேட்டுக்கொண்டிருந்த மலை ஜாதியினரின் குழந்தைகள் பக்கம் திருமதி பேரியின் கவனம் சென்றது. அவர்களைப் பக்கத்தில் அழைத்து விசாரித்தாள்! குழந்தைகள் "பள்ளிக்கூடம்" என்ற வார்த்தையைக் கூட கேள்விப்பட்டதில்லை. திருமதி பேரி வாரந்தோறும் அந்த குழந்தைகளை வரவழைத்து பாட்டுப் பாடி வந்தாள். யேசுநாதர் வரலாற்றிலிருந்தும் சில சிறு கதைகளைச் சொல்லுவாள். இதுதான் இன்று அங்கு அமைந்துள்ள பேரிப் பள்ளியின் துவக்கம்.

வளர்ச்சி வரலாறு

மெதுவாக குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்ததால் இந்த ஞாயிறு பாடசாலை அந்த கிராமத்தின் மாதாகோயிலில் நடக்கலாயிற்று. பிறகு குழந்தைகளுக்கு எழுதப் படிக்கக் கற்பிக்க வேண்டும் என்று எண்ணி தனது சொந்த நிலத்திலேயே திருமதி பேரி ஒரு பள்ளிக்கூட கட்டிடம் கட்டலானாள்! பிறகு தனது நிலமனைத்தையும் அப்பள்ளிக்காகவே கொடுத்துவிட்டாள். பள்ளிக்கூடத்தின் வருமானம் அதிகரித்து வந்துகொண்டிருந்த பொழுதிலும், மாணாக்கர்களின் செலவு அதிகரித்து வந்ததினால் செலவிற்கு கஷ்டமாகவே இருந்தது. மார்த்தாபேரி அம்மையார் பெரிய நகரங்களில் அலைந்து பள்ளிக்கூடத்திற்காக நிதி திரட்டத் துடங்கினாள். இன்று 100 கட்டிடங்களில் மாணாக்கர்கள் வசித்து வருகின்றனர். கல்வி கற்கின்றனர்.

உழைத்து, உண்டு கல்விகற்கின்றனர்

இந்தப் பள்ளியில் படிக்கும் மாணாக்கர்கள், தம் உழைப்பினால் தங்கள் தேவைக்கு வேண்டிய சகல பொருட்களையும் உற்பத்தி செய்துகொள்கிறார்கள். மாணவர்கள் வாரத்தில் நான்கு நாட்கள் பள்ளிக்கூடம் செல்கின்றனர். இரண்டு நாட்கள் வேலை செய்து தங்கள் வாழ்க்கைச் செலவையும், பள்ளிக்கூட கட்டணத்தையும் சம்பாதித்துக் கொள்கின்றனர். நூற்றுக்கு 80 பேர்கள் வீதம் பூராக் கட்டணமும் செலுத்துகின்றனர். விஞ்ஞான வகுப்புகளுக்கும், விவசாய வகுப்புகளுக்கும் மாணவர்கள் தாமே வேலை செய்து கட்டிடங்களை எழுப்பினார்கள்—செங்கல்கள் தயாரித்தனர், கதவுகளும், வாயில்படிகளும் தயாரித்தனர், சுவர் எழுப்பினர்–எல்லாம் மாணவர்களே செய்தார்கள். இந்தப் பள்ளிக்கூடத்தில் வேலை ஆட்களே இல்லை. ஒரு பொருளைத் தாமே, தம் கையால் செய்துள்ளனர் என்பதைக் குறித்து மாணவர்கள் பெருமைப்படுகின்றனர்.

வேலைகளைப் பகிர்ந்துகொள்கிறார்கள்

மாணவர்கள் விவசாயத்திலும், மாணவிகள் சமையல், வீட்டுவேலைகள் முதலியவைகளிலும் ஈடுபடுகின்றனர். மாணவர்கள் பழச் செடிகளை வளர்க்கிறார்கள், பழவகைகளை சேகரிக்கிறார்கள். மாணவிகள் அவைகளை டப்பாக்களில் பக்குவம் செய்து அடைத்து வைக்கிறார்கள்; இம்மாதிரியான வேலைகளைப் பகிர்ந்துகொள்கிறார்கள். மாணவிகள் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களின் வேலையையும், ஆபீஸ் வேலைகளையும் சமாளித்துக்கொள்கின்றனர். பள்ளிக்கூட சிப்பந்திகளோ, மாணவர்களோ, நோய்வாய்ப்பட்டிருந்தால் அவர்களுக்கு வேண்டிய வைத்திய உதவிகளும் அளிக்கின்றனர்.

கவர்னர் குழந்தைகளுக்கும் தகுந்தது

சென்ற 1952ம் ஆண்டில் திருமதி மார்த்தா பேரி அம்மையார் காலமானார். எனினும் அந்தப் பள்ளிக்கூடம் இன்றும் நடைபெற்று வருகின்றது

சில நாட்களுக்கு முன் இந்த பேரி பள்ளிக்கூடத்திற்கு ஜியார்ஜியா கவர்னர் தனது குழந்தைகளை அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்க்க விருப்பம் தெரிவித்தார். அதற்கு உடனே பதில் கிடைத்தது. "மன்னியுங்கள், கவர்னர் அவர்களே, இதர பள்ளிக்கூடங்களில் சேர பண வசதி இல்லாத குழந்தைகளைத்தான், எமது பள்ளியில் சேர்க்கிறோம் !!!"

— ஜேம்ஸ் ஸாக்ஸன் சில்டர்ஸ்

[ஹிந்தி சதாயி மண்டல் பத்திரிகையிலிருந்து]

தென் ஆற்காடு ஜில்லா.

கடலூர் தாலூக்காவில் பூமிதான யாத்திரை.

ஊழியர்கள் கூட்டம்.

கடலூர் தாலூக்கா பூமிதான ஊழியர் கூட்டம் 21–8–54 ல் கூடி திட்டமிட்டபடி கடலூர் தாலூக்கா பூமிதான யாத்திரை 4–9–54 மாலை 3-30 மணிக்கு திருப்பாப்புலியூர் கதர் வஸ்திராலயத்திலிருந்து தமிழ் நாட்டு பூமிதானக் கமிட்டி கன்வீனர் ஸ்ரீ ச. ஜகந்நாதன், சர்வ சேவா சங்க தமிழ் நாட்டுப் பிரதிநிதி ஸ்ரீ அ. பாலகிருஷ்ணப் பிள்ளை இவர்களின் தலைமையில் 26 தொண்டர்களுடன் புறப்பட்டனர். கடலூர் நிலச்சுவான்தார் ஸ்ரீ டி. கே. நாராயணசாமி நாயுடு

3-JAN 1956 MADRAS

யாத்திரைக் கோஷ்டியினரை வரவேற்று உபசரித்து அவருக்குச் சொந்தமான அப்பர் சுவாமிகள் பிறந்த திருவாமூர் கிராமத்திலும் விசலூர் கிராமத்திலும் சேர்ந்து 6 ஏக்கர் 14½ செண்ட் நிலம் தானமாக அளித்தார்கள்.

இரண்டாம்முறை நிலதானம் கொடுத்தவர்.

அங்கிருந்து கோஷ்டியினர் பட்டாம் பாக்கம் சென்று இரவு கோழிப்பாக்கம் சேர்ந்தனர். ஸ்ரீ வி. எல். இராமகிருஷ்ண ரெட்டியார் இங்கு கோஷ்டியினருக்கு வேண்டிய உபசரணை செய்து 2 ஏக்கர் நிலம் தானமாக அளித்தார்கள். இக் கிராமத்திலேயே தியாகி திரு. விட்டல் ஸ்ரீநிவாசராவ் ஏற்கனவே அவர் செய்த நிலதானத்தோடு மேற்கொண்டு 50 செண்ட் நிலம் தானம் செய்தார்.

மேல் கவரப்பட்டு.

5-9-54 காலை 8 மணிக்கு யாத்திரை கோஷ்டியினர் மேல்கவரப்பட்டுக்கு புறப்பட்டனர். இங்கு கோஷ்டியினரை ஸ்ரீ ஸ்ரீநிவாச ரெட்டியார் வரவேற்று உபசரித்தார். இக்கிராம கோயில் மேடையில் பூமிதான வில்லுப்பாட்டு காவனூர் ஆதாரப் பாடசாலை மாணவர்களால் நடத்தப்பெற்றது. இங்குள்ள நிலச் சுவான்தார்களை பூமிதானம் செய்யும்படி கேட்டுக் கொண்டதில் ஒரு வாரத்தில் எவ்வளவு விஸ்தீரணம் கொடுக்க விரும்புகிறார்கள் என்பதை கிராமத்தினர் அனைவரும் கலந்து முடிவு செய்து தெரிவிப்பதாக ஷெயூர் கிராம முனிசிப் ஸ்ரீ நீலகண்ட ரெட்டியார் தெரிவித்தார்கள். மாலை கவரப்பட்டியிலிருந்து புறப்பட்டு கோஷ்டியினர் கொண்டாரெட்டிபாளையம் சேர்ந்தனர். இங்கு ஸ்ரீ ஜி. பி. ஜகதீச ரெட்டியார் யாத்திரை கோஷ்டியினருக்கு உபசரணைகள் செய்து நிலதானம் 2 ஏக்கர் கொடுத்தார்கள். இரவு பூமிதான வில்லுப்பாட்டும், தமிழ்நாடு காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினர் ஸ்ரீ எம். வி. சுதர்சனம் நாயுடு தலைமையில் "பூமிதான"ப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. 6ஆ காலை பண்ருட்டிக்கு யாத்திரை கோஷ்டியினர் புறப்பட்டனர்.

பண்ருட்டியில்

பண்ருட்டி நகரை கோஷ்டியினர் பூமிதான கோஷங்கள், பாடல்கள் பாடிக்கொண்டு ஊர்வலம் வந்து ஸ்ரீ தேவநாதன் செட்டியார் கட்டிடத்தில் தங்கினர். வில்லுப்பாட்டு பிரசாரம் இங்கு நடைபெற்றது. கோஷ்டியினரை நகர காங்கிரஸ் கமிட்டியினர் வரவேற்று உபசரித்தனர். கிராமோதய சந்தா 9 சேர்க்கப்பெற்றன.

பாலூர்

பண்ருட்டியிலிருந்து மாலை 3மணிக்கு புறப்பட்டு 6 மணிக்கு முத்துக்கிருஷ்ணபுரம் வழியாக பாலூர் சேர்ந்தனர். இரவு ஜில்லா போர்டு அங்கத்தினர் ஸ்ரீ பி. ஏ. ரங்கநாத படையாச்சி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பூமிதான இயக்கம் பற்றி ஸ்ரீ வடிவேலு பத்தர் ஸ்ரீ எதிராஜ் M. L. C. ஸ்ரீ திருவேங்கடம் செட்டியார், ஸ்ரீ புருஷோத்தமன், ஸ்ரீ பி. வி. வேங்கடேசன் ஆகியோர் பேசினர். தாலூகா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ தேவநாதன் கோஷ்டியினரை உபசரித்தார். இக் கிராமத்தில் சிக்கிரம் தாங்கள் கொடுக்கவிருக்கும் தானம் பற்றி முடிவு சொல்வதாக வாக்குறுதியளித்துள்ளனர்.

நெல்லிக்குப்பம்

7-9-54 காலை யாத்திரை கோஷ்டியினர் நெல்லிக் குப்பத்துக்கு புறப்பட்டனர். நெல்லிக்குப்பம் நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர், காரியதரிசி, மற்றும் சில பிரமுகர்களும் கோஷ்டியினரை வரவேற்றனர். இங்கு பூமிதான பிரசாரம் செய்யப்பெற்றது. மாலை நெல்லிக் குப்பத்திலிருந்து வாரக்கால்பட்டு வழியாக திருப்பாப் புலியூருக்கு யாத்திரை குழுவினர் வந்து சேர்ந்தனர். திருப்பாப்புலியூர் வஸ்திராலயத்தில் யாத்திரையில் கலந்து கொண்ட ஊழியர்கள், தொண்டர்கள், உப சரணை செய்தோர், நிலதானம் செய்தோர் முதலிய வர்களுக்கு ஜில்லா பூமிதானக் கமிட்டி கன்வீனரும் தாலூகா பூமிதானக் கமிட்டி கன்வீனரும் நன்றி தெரிவித்தனர்.

உதவிக்கு நன்றி

யாத்திரை நல்ல முறையில் அமைய தாலூகா காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி ஸ்ரீ என். சுந்தரம் செட்டியார், திருப்பாப்புலியூர் கதர் வஸ்திராலய நிர்வாகி ஸ்ரீ ஏ. வி. குப்புசாமி, காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ எஸ். ஏ. தேவநாயகய்யா முன் ஏற்பாடுகள் செய் திருந்தனர்.

நிலதானம் கொடுத்து, கோஷ்டியினரை உப சரித்ததோடு ஸ்ரீ டி. கே. நாராயணசாமி நாயுடு அவர் களும், ஸ்ரீ வி. எல். ராமகிருஷ்ண ரெட்டியாரும் யாத் திரையில் கலந்து கொண்டது பாராட்டத்தக்கது.

யாத்திரை சென்ற ஊர்கள்.

புதுப்பாளையம், மேல்பட்டாம்பாக்கம், கொங்க ராயநல்லூர், கோழிப்பாக்கம், மேல்கவரப்பட்டு, கொண்டாரெட்டிபாளையம், பண்ருட்டி, திருவதிகை, முத்துக்கிருஷ்ணபுரம், பாலூர், நெல்லிக்குப்பம், காராமணிகுப்பம், விசுவரெட்டிபாளையம், வரகால்பட்டு திருப்பாப்புலியூர், யாத்திரை செய்த மொத்த தூரம் 30 மைல்.

கிடைத்த நிலதானம்.

	ஏ.	செ.
ஸ்ரீ டி. கே. நாராயணசாமி நாயுடு, புதுப்பாளையம்	6	14½
,, வி. எல். ராமகிருஷ்ண ரெட்டியார், கோழிப்பாக்கம்	2	0
,, விட்டல் சீநிவாசராவ், சிறுகிராமம்	0	50
,, ஜி. பி. ஜெகதீச ரெட்டியார், கொண்டாரெட்டிபாளையம்	2	0
மொத்த ஏக்கர்	10-64½	

வாக்குறுதிகள்

கோழிப்பாக்கம் சுந்தர ரெட்டியார், கவரப்பட்டு திரு. சீனிவாசலு ரெட்டியார், நீலகண்டா ரெட்டியார் பாலூர் திரு. பி. ஏ. ரங்கநாத படையாச்சி, திரு. முத்துகிருஷ்ண படையாச்சி, தாலூக்கா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. ஜே. தேவநாதன், நடுத்திட்டு திரு. டி என். சீனிவாசகச்சிராயர், கிழிஞ்சிப்பட்டு திரு. ரெட்டியார் முதலானோர் வாக்களித்துள்ள பிரகாரம் சுமார் 50 ஏக்கர் தானம் கிடைக்குமென நம்புகிறோம்

யாத்திரையில் கலந்துகொண்டோர்:

தமிழ்நாட்டு காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தி னர் திரு. எம். வி. சுதர்சனம் நாயுடு, திரு. எம். எத்தி ராஜ் M. L. C., திரு. எஸ். ஏ. தேவநாயகய்யா, (காங்கிரஸ் தலைவர்) திரு. வடிவேலு பத்தர் (முனிசிபல் கவுன்சி லர்), பிரஜா சோஷலிஸ்டு கட்சி திரு. புருஷோத்தம நாயுடு, திரு. நடராஜன், ஜில்லா காங்கிரஸ் கமிட்டி உதவி காரியதரிசி பி. வி. வேங்கடேசன், திரு. விட்டல் சீனிவாசராவ், சத்தார் சாகிப், கிருஷ்ணன், என். எம். ஏழுமலை ஆச்சாரி, கே. வீரப்பன், பண்ருட்டி திரு. கோவிந்தசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாத்திரை ஆரம்ப சமயம் கடலூர் நகர காங்கி ரஸ் கமிட்டிக் காரியதரிசி திரு. எம். வேணுகோபால், பிரஜாசோஷலிஸ்ட் கட்சி திரு. பரமசிவம், திரு. ராதா, திரு. டி.கே. ராதாகிருஷ்ணன், திரு. ராமசாமி, திரு. பலராமன் முதலியோர் உடன் இருந்து கலந்துகொண் டனர்.

(தொடர்ச்சி 104-ம் பக்கம் பார்க்க)

கேரளத்தின் கிராமோதய கதர் சங்க ஆண்டு அறிக்கை.

பாலக்காடு விபாக். [1953 செப்டம்பர் முதல் 1954 ஏப்ரல் வரை]

	கிராம சமிதிகள் ஊர்.	இணைக்கப்பட்ட சர்க்கா சங்கக் கிளை	நூல் உற்பத்தி கிரயம்	கதர் விற்பனை கிரயம்	கதர் உற்பத்தி கிரயம்
1.	தலவடி				
2.	வைக்கம்	சேர்த்தலை	6123 12 0	4579 3 6	382 11 3
3.	துறவூர்				
4.	பெரும்பாவூர்				
5.	பறவூர்	எரணாகுளம்	3554 5 0	3086 1 0	— —
6.	வாழக்குளம்				
7.	மஞ்சப்பரை	ஆலத்தூர்	422 8 0	1100 13 0	564 0 0
8.	வடக்கஞ்சேரி				
9.	அகத்தேத்தர				
10.	கடம்பழிப்புறம்	பாலக்காடு	710 1 3	633 3 3	135 0 0
11.	பேரூர்				
12.	களப்பெட்டி				
13.	சளவரை	கோதக்குறிச்சி	4530 0 0	2223 12 6	165 0 0
14.	வல்லப்புழ				
15.	பகரை	திரூர்	997 7 0	605 2 9	— —
16.	தானூர்				
17.	மேழத்தூர்				
18.	சம்ரவட்டம்	பொன்னானி	289 12 0	124 15 3	1828 8 0
19.	படித்தரை				
20.	திருவத்திர				

கோழிக்கோடு விபாக். [1953 ஆகஸ்டு முதல் 1954 ஏப்ரல் முடிய]

	கிராம சமிதிகள் ஊர்.	இணைக்கப்பட்ட சர்க்கா சங்கக் கிளை	நூல் உற்பத்தி கிரயம்	கதர் விற்பனை கிரயம்	கதர் உற்பத்தி கிரயம்
21	சிறக்கல்		2277 0 0	1682 0 0	735 0 0
22.	அஞ்சரக்கண்டி		652 0 0	507 0 0	73 0 0
23.	கொயிலாண்டி		5753 0 0	1997 0 0	2320 0 0
24.	வியூர்		5225 0 0	2792 0 0	— —
25.	எடக்குளம்		4882 0 0	2127 0 0	— —
26.	பாலுச்சேரி		569 0 0	498 0 0	— —
27.	சிவபுரம்		111 0 0	263 0 0	— —
28.	சாத்தமங்கலம்		163 0 0	660 0 0	— —
29.	உண்ணிபரம்பு		79 0 0	449 0 0	— —
30.	சேவாயூர்		7036 0 0	5052 0 0	— —
31.	நெடுங்கோட்டூர்		6796 0 0	4196 0 0	— —
32.	கண்ணஞ்சேரி		5841 0 0	2413 0 0	— —
33.	ராமநாட்டுக்கர		3548 0 0	2319 0 0	— —
34.	சேலேம்பற		415 0 0	125 0 0	— —
35.	அறியலூர்		1470 0 0	1080 0 0	— —
36.	வெள்ளிக்குன்னு		3860 0 0	2451 0 0	66 0 0
37.	தேஞ்ஞிப்பலம்		1553 0 0	1446 0 0	— —
38.	நிலம்பூர்		214 0 0	459 0 0	— —

நாகர்கோவில் விபாக். [1953 ஏப்ரல் முதல் 1954 ஏப்ரல் முடிய]

	கிராம சமிதிகள் ஊர்.	இணைக்கப்பட்ட சர்க்கா சங்கக் கிளை	நூல் உற்பத்தி கிரயம்	கதர் விற்பனை கிரயம்	கதர் உற்பத்தி கிரயம்
39.	கன்யாகுமரி		305 10 3	305 15 9	— —
40.	கொட்டாரம்		3006 15 3	1324 13 3	— —
41.	மகாராஜபுரம்		306 7 6	114 7 0	— —
42.	அகஸ்தீசுவரம்		2339 13 3	986 8 6	— —
43.	எலசத்துப்பட்டு		2192 13 0	880 10 0	— —
44.	விஜயநகரி		1229 8 6	634 5 9	— —
45.	சரவணந்தேரி		2100 14 0	790 9 6	— —
46.	அஞ்சுகிராமம்		466 6 6	299 0 9	— —
47.	சந்தயடி		4151 9 3	1914 15 3	— —
48.	சுக்குப்பாரை		1404 10 9	550 8 3	— —
49.	பூவியூர்		4971 4 6	1756 13 9	— —
50.	முகிலன்குடியிருப்பு		5911 9 0	2133 9 3	— —
51.	ஸ்வாமிதோப்பு		2178 8 9	860 0 3	— —
52.	தாமரக்குளம்		3237 2 9	1564 0 6	— —
53.	சூரல்		2019 7 0	898 8 3	— —
54.	பரக்கே		5229 9 3	2841 13 3	— —
55.	பொட்டல்		4605 4 6	1435 4 6	— —
56.	சொத்தவிளை		1727 13 0	500 0 9	— —
57.	புத்தளம்		2303 14 6	863 13 3	— —
58.	பணிக்கன்குடியிருப்பு		14792 8 9	5833 0 6	— —
59.	பரக்கோடு		4283 5 0	3616 0 3	— —
60.	நெய்யூர்		5750 12 6	3299 8 9	— —
61.	தேமனூர்		883 2 0	553 9 3	— —
62.	பத்மநாபபுரம்		3042 14 6	1807 15 6	— —
63.	பெரூர்க்கடை		711 5 3	263 5 0	— —
64.	போர்ட்டு		1644 6 3	619 0 3	— —
65.	இரணியல்		420 7 6	49 8 3	— —
		மொத்தம்...	148380 0 6	79567 0 9	6269 3 3

3 - JAN 1956
MADRAS

(102:ம் பக்கத் தொடர்ச்சி)

யாத்திரை போன கிராமங்களிலெல்லாம் காவனூர் ஆதாரப் பாடசாலை மாணவர்கள் கதிர்வேல், ஜயராமன், பூமாலை, ஷேக்மியான் "பூமிதான"ப் பாடல்களும் வில்லுப்பாட்டும் பாடினர்.

திருப்பாப்புலியூர்.
8-9-'54.

மு. ராமகிருஷ்ண ரெட்டி,
கன்வீனர்,
தெ. ஆ. ஜில்லா பூதானக் கமிட்டி.

விளையும் நிலம் கேட்க விரைந்தாரடா!

(எஸ். கே. ராமசாமி.)

1 வீட்டுக்கொரு புதல்வன் வினோபாவடா -அவர்
விட்டிடாமல் பாகம் ஒன்று கேட்கிறாரடா
நாட்டுக்கென்றே பொறுப்பு வாய்ந்தவரடா -நம்மை
வாட்டுகின்ற சோற்றுப்பஞ்சம் தீர்ப்பாரடா

2 பள்ளியின் பட்டமதை எரித்தவரடா -அவர்
பாரதியின் நூல்களையும் படித்தவரடா
வெள்ளியும் பொன்னையும் வெறுத்தாரடா -அவர்
விளையும் நிலம் கேட்க விரைந்தாரடா

3 பூமிதான திட்டமொன்று வகுத்தாரடா -மக்கள்
புத்துயிர் பெற்றுவாழ நினைத்தாரடா
பக்தியோடு பிரார்த்தனைகள் செய்கிறாரடா -அவர்
பாரினிலே பஞ்சமதைப் போக்கவேயடா

4 தெய்வஜோதி காந்தியண்ணல் சீடர்தானடா-அவர்
வினோபாவே நமது தலைவர்தானடா [திரு
தமிழகத்தின் வறுமை போக்க வருகிறாரடா -பூமி
தானமீந்து தர்மவேள்வி பண்ணுவாயடா
(வீட்டுக்கொரு)

[பாட்டுக்கொரு புலவன் பாரதியடா—
என்ற மெட்டில் பாடலாம்.]

(99-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த கிராமத்தில் நிலமில்லாத ஏழைகளே இல்லை என்று கூறப்பட்டது.

தொட்டிபாளையத்தில் ஏற்கனவே சில மிராசுதார்கள் பூமிதானம் வழங்கிவிட்டபடியால் அங்கு கிராம அபிவிருத்தி வேலைகளை கதர், கிராமக் கைத்தொழில்களின் உதவியால், கூட்டுறவு மனோபாவனையுடன் ஒரு கிராமோதய கதர் சங்கம் அமைப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

தம்புரெட்டியாபாளையம் கிராமோதய கதர் சங்கத் தலைவர் ஸ்ரீ பாட்டப்ப கவுண்டர் அவர்கள் சுற்று வட்டார கிராமங்களில் பூமிதானப் பிரசாரமும், சர்வோதய கருத்துப் பிரசாரமும் செய்துவருகிறார்.

— **ஸி. சுப்பையன்**

கொடுவாய்

5—9—'54 தேதி காலை காட்டூர்புதூருக்குச் சென்று பூமிதான யக்ஞப் பிரசாரம் செய்யப்பட்டது. யாத்திரையில் கொடுவாய்க் கிளை வஸ்திராலயத் தொண்டர்களும், வஞ்சிபாளையம் கிராமோதய கதர் சங்க ஊழியர்களும் கலந்துகொண்டார்கள். காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை வீடு வீடாகச் சென்று பூமிதான யக்ஞப் பிரசாரமும் செய்யப்பட்டது.

மாலை 7 மணிக்கு பிரார்த்தனையுடன் பொதுக் கூட்டம் நடந்தது. அதில் சுமார் 450 பேர்கள் கலந்து கொண்டார்கள். நூற்போர், நெய்வோர், சலவைத் தொழிலாளர்கள் அனைவரும் கலந்துகொண்டார்கள். பொதுக்கூட்டத்திற்கு ஸ்தல கதரன்பரும், சர்வோதய ஊழியருமான ஸ்ரீ கிருஷ்ணசாமி கவுண்டர் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் "கிராமோதய" கதர் சங்க ஊழியர்கள், கதர் தொண்டர்களும் பூமிதான யக்ஞம், குடிசைத் தொழிலபிவிருத்தி முதலிய விஷயத்தைப் பற்றி பிரசாரம் செய்தனர்.

22—9—'54 தேதி ஷை தொண்டர்கள் வஞ்சி பாளையம் கிராமத்திற்குச் சென்றனர். அங்கும் காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை வீடுவீடாகச் சென்று பிரசாரம் செய்யப்பட்டது. மாலை பிரார்த்தனையும், பொதுக்கூட்டமும் ஸ்ரீ முத்துசாமி கவுண்டர் தலைமையில் நடைபெற்றதில் சுமார் 200 பேர்கள் கலந்துகொண்டனர்.

— **கே. என். ராமசாமி**

திண்டுக்கல்

12—8—'54 தேதி ஆத்தூர் பிர்க்கா பூமிதான யாத்திரைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆத்தூர் பிர்க்காவில் ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் அவர்கள் வரும் 21-9-'54 தேதி மதுரை ஜில்லாவில் யாத்திரை செய்யும்பொழுது ஒரு பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இம்முறை திண்டுக்கல் தாலூகாவில் குறைந்தபட்சம் 500 ஏக்கர் நிலமாகிலும் தானமாக பெறுவதற்கு முயற்சி செய்து வருகிறார்கள்.

4—9—'54 முதல் திண்டுக்கல் தாலூக்கா பூராவும் பூமிதானம் பெறுவதற்கு சுற்றுப்பிரயாணம் செய்வதென்று முடிவு செய்துள்ளோம்

— **அ. கருப்புசாமி**

தேனூர்

27—8—54-ல 8 மணிக்கு தொண்டர்கள் கோஷ்டி பிரார்த்தனை செய்துவிட்டு போலம் பட்டி, வருதக்கோனம்பட்டி, முதலிய ஊர்களுக்குச் சென்று அங்குள்ள ஜனங்களுக்கு பூமிதான இயக்கத்தைப்பற்றி சொற்பொழிவாற்றிவிட்டு திரும்பினார்கள்.

3—9—'54-ல பிரார்த்தனையுடன் 9 மணிக்கு புறப்பட்டு இரண்டு மைல்தூரமுள்ள முருக்கம்பட்டிக்குச்சென்று அங்குள்ள மக்களுக்கு பூமிதான இயக்கத்தைப் பற்றி பிரசாரம் செய்துவிட்டு 12 மணிக்கு தேனூர் திரும்பினோம். மாலை ஒரு பொதுக்கூட்டத்தை ஆரம்பித்து பூமிதான இயக்கத்தைப்பற்றி விரிவாக சொற்பொழிவாற்றப்பட்டது.

ஷை யாத்திரையில் ஸர்வோதய சந்தா ஒன்றும் கிராமோதய சந்தா பதினொன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

— **பி. என். முத்துஐயர்**

இந்த இதழில்

வேற்றுமைகளை மறப்போம்	97
மனிதன் அதிகாரத்தால் ஆளப்படுகிறதில்லை	97
உமரிமாநகரில் கிராமோதய கதர் சங்க ஆரம்பவிழா	97
தமிழ்நாடு பூமிதான இயக்கம்	98
தீபாவளிக்கு ஒரு கோடி ரூபாய்க்கு கதர் விற்பனை: கதர் போர்டு திட்டம்	98
தமிழ்நாட்டில் பூமிதான யாத்திரைகள்	98, 99, 104
தமிழ்நாட்டில் சர்க்கா சங்க ஊழியர்களால் பூமிதான இயக்கம் தீவிரம்	100
மதுரையில் பூமிதான வேலை	100
அமெரிக்காவில் ஆதாரக்கல்வி	101
கடலூர் தாலூக்கா பூமிதான யாத்திரை	101, 102
கேரளத்தின் கிராமோதய கதர் சங்க ஆண்டு அறிக்கை	103

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.

(இந்தப் பத்திரிகை கையினுல் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)